சுருக்கம்

மிதிவண்டிகள் – அரசு பள்ளிகள் /அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 2019–2020–ஆம் கல்வி ஆண்டில் +1 பயிலும் மற்றும் 2020–2021–ஆம் கல்வி ஆண்டில் +1 பயிலவிருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்குதல் – 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கு தொடர்ந்து செயல்படுத்துதல் – பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை

அரசாணை (நிலை) எண். 48

நாள் 16. 08.2019
விகாரி, ஆடி 31
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது :-

1. அரசாணை (நிலை) எண்.21, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந)த் துறை, நாள் 17.6.2004.
2. அரசாணை (நிலை) எண்.73, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந)த் துறை, நாள் 26.7.2005.
3. அரசாணை (நிலை) எண்.31, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந)த் துறை, நாள் 22.05.2018.
4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.டி3/7844/2018, நாள் 25.06.2019.

---

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2004–2005–ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு முதலில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவியருக்கும், பின்னர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2005–2006–ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேலும், அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெற்று 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளை சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகள் ஆகியவற்றில் +1 வகுப்பில் படிக்கும் அனைத்து இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தினை 2017–2018 மற்றும் 2018–2019–ஆம் ஆண்டுகளுக்கு செயல்படுத்திட ஆணையிடப்பட்டது.

2. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் நடைபெற்ற மாநில கணக்காயரின் தணிக்கையின் போது இத்திட்டம் குறித்த தணிக்கை தடை பத்தியில் மாணவ / மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் பள்ளிகள் திறந்ததும் விரைந்து வழங்கி முடிக்கவில்லை எனவும் 2015–2016, 2016–2017 மற்றும் 2018–2019–ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தப்புள்ளி தாமதமாக கோரப்பட்டு மாணவ / மாணவியருக்கு தாமதமாக மிதிவண்டிகள்

வழங்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தின் நோக்கம் மாணவ / மாணவியருக்கு முழுமையாக சென்றடையவில்லை என்று குறிப்பிட்டுள்ளதாக பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மிதிவண்டிகளை கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நாளிலிருந்து அவற்றை அனைத்துப் பள்ளிகளிலும் முழுமையாக இறக்கி, பூட்டி வழங்கிட தோராயமாக 5 மாதங்கள் தேவைப்படுகிறது எனவும், தற்போது நடப்பு கல்வியாண்டிற்கு பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற நிலையில், 2019–2020–ஆம் ஆண்டிற்கு மாணவ / மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால், இக்காலதாமதத்தினால் அடுத்து வரும் 2020–2021–ஆம் ஆண்டிற்கும் காலதாமதம் ஏற்படும் வாய்ப்புள்ளது எனவும் எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நடப்பு ஆண்டில் 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் ஒரே மாதிரியான கொள்முதல் ஆணை வழங்க ஏதுவாக முந்தைய ஆண்டில் (2018–2019) சீரமைக்கப்பட்ட 10 உறுப்பினர்கள் கொண்ட கொள்முதல் குழுவினைக் கொண்டே நடப்பாண்டிற்கும் கொள்முதல் பணிகளை மேற்கொள்ளலாம் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், ஒவ்வொரு ஆண்டும் மிதிவண்டிகள் கொள்முதலுக்காக அரசு ஏறக்குறைய ரூ.225/– கோடிக்கும் மேற்பட்ட தொகையை செலவிடுகிறது எனவும், இது மிகப்பெரிய ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கும் மிதிவண்டிகளை கொள்முதல் செய்யவிருப்பதால் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரை தலைவராகக் கொண்ட 10 உறுப்பினர்கள் அடங்கிய தற்போதுள்ள கொள்முதல் குழுவே தொடர்ந்து நீடிக்கலாம் எனவும், விலைப்புள்ளி மதிப்பாய்வுகளின் போது வரிகள் தொடர்பான கருத்துகள் பெற வணிக வரித்துறை ஆணையர் அல்லது அவரின் நியமன அதிகாரி எவரேனும் ஒருவரை சிறப்பு அழைப்பாளராக அழைக்க கொள்முதல் குழுவிற்கு அதிகாரம் அளிக்கலாம் என்று பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. 2018–2019–ஆம் ஆண்டில், இரு ஆண்டுகளுக்கும் (2017–2018 மற்றும் 2018–2019) சேர்த்து பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர்/ சிறுபான்மையினர்/ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் இதர வகுப்புகளைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்ட மிதிவண்டிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கான உத்தேச தேவைப்பட்டியலாக கருதி கீழ்க்கண்ட தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| | துறை | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | மாணவர்கள் ரூ. | மாணவிகள் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை | 164156 | 228098 | 392254 | 618047340 | 838032052 | 1456079392 |
| 2. | மிகப்பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை | 154148 | 198490 | 352638 | 580367220 | 729252260 | 1309619480 |
| 3. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 136000 | 180232 | 316232 | 512040000 | 662172368 | 1174212368 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. இதர வகுப்பினர் | 7918 | 11690 | 19608 | 29811270 | 42949060 | 72760330 |
| மொத்தம் | 462222 | 618510 | 1080732 | 1740265830 | 2272405740 | 4012671570 |

2018–19 ஆம் ஆண்டில் இறுதி செய்யப்பட்ட ஒரு மிதிவண்டியின் விலை (தோராயமாக)

மாணவர் – ரூ. 3,765/– வரிகள் உட்பட (அடிப்படை விலை – 3362.00 வரி–403.00)

மாணவியர் – ரூ. 3674/– வரிகள் உட்பட (அடிப்படை விலை – 3280.00 வரி– 394.00)

6. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துரு மற்றும் பரிந்துரைகளை நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 2019–2020–ஆம் கல்வி ஆண்டில் +1 பயிலும் மற்றும் 2020–2021–ஆம் கல்வி ஆண்டில் +1 வகுப்பு பயிலவிருக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் / ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் இதர வகுப்புகளைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தலாம் எனவும் 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கு மிதிவண்டிகள் கொள்முதல் செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரை தலைவராக கொண்ட கீழ்க்காணும் 10 உறுப்பினர்கள் அடங்கிய தற்போதுள்ள கொள்முதல் குழுவே தொடர்ந்து நீடிக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது:-

| | | |
|---|---|---|
| 1. | இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன் | தலைவர் |
| 2. | இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | உறுப்பினர் |
| 3. | ஆணையர், சிறுபான்மையினர் நலன் | உறுப்பினர் |
| 4. | இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் | உறுப்பினர் |
| 5. | இப்பொருள் தொடர்புடைய சிறப்பு செயலர்/ கூடுதல் செயலர்/ இணைச் செயலர், நிதித்துறை | உறுப்பினர் |
| 6. | பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6 | உறுப்பினர் |
| 7. | தொழில்வணிக இணை இயக்குநர் (Engineering). | உறுப்பினர் |
| 8. | பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. | உறுப்பினர் |
| 9. | முதன்மைக் கணக்கு அலுவலர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5. | உறுப்பினர் |
| 10. | கணக்கு அலுவலர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5. | உறுப்பினர் |

மேலும், விலைப்புள்ளி மதிப்பாய்வுகளின் போது வரிகள் தொடர்பான கருத்துகள் பெற வணிக வரித்துறை ஆணையர் அல்லது அவரின் நியமன அதிகாரி எவரேனும் ஒருவரை சிறப்பு அழைப்பாளராக அழைக்க கொள்முதல் குழுவிற்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

7. 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளில் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:–

(i) அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் +1 பயிலும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர்/ சிறுபான்மையினர்/ ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் இதர வகுப்பினரைச் சேர்ந்த மாணவ / மாணவிகளுக்கு 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் விதிகளை அனுசரித்து கொள்முதல் குழு மூலமாக மிதிவண்டிகளின் கொள்முதல் விலையினை நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(ii) கடந்த 2018–2019–ஆம் ஆண்டில் இரு ஆண்டுகளுக்கு (2017–2018 மற்றும் 2018–2019) சேர்த்து பெறப்பட்ட அசல் கேட்பினை அடிப்படையாகக் கொண்டு 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளுக்கான மிதிவண்டிகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.

(iii) பள்ளிகளில் மாணவர்/மாணவியர் சேர்க்கை முடிந்தவுடன் கூடுதல் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு அக்டோபர் மாத இறுதியில் எஞ்சிய மிதிவண்டிகளை வழங்க வேண்டும்.

(iv) மிதிவண்டிகளுக்கான தேவைப்பட்டியல் கணக்கிடுதல் மற்றும் உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அளித்தல், மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் மிதிவண்டிகள் குறித்த விவரத்தினை இணையதளத்தில் உடனுக்குடன் பதிவு செய்தல் போன்றவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(v) கொள்முதல் செய்யப்பட்ட மிதிவண்டிகளுக்குண்டான செலவினங்களை தொடர்புடைய கணக்கு தலைப்புகளில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

(vi) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர்/ சிறுபான்மையினர் /ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் இதர பிரிவுகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு விநியோகிக்கப்படும் மிதிவண்டிகளை சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டதற்கான ஒப்புதல்களை மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின் வழங்கப்பட்ட மிதிவண்டிகளுக்கான தொகை, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

(vii) இதே போன்று கூடுதல் தேவைப்பட்டியலின்படி வழங்கப்படும் மிதிவண்டிகளுக்கும் மாவட்ட ஆட்சியர் மூலமே பட்டியல்கள் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

(viii) கடந்த ஆண்டுகளைப் போன்றே மிதிவண்டிகள் வழங்குவதற்கான தகுதிகள் பெற்ற +1 வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியர் சேர்க்கை குறித்த விவரங்களை ஒவ்வொரு மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியரும் உடனுக்குடன் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை கண்காணிப்பதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். (இணையதள முகவரி. (www.agaram.tn.gov.in/freecycles2019)

(ix) 2019–2020 மற்றும் 2020–2021–ஆம் ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு அடையாள எண் வழங்க ஏதுவாக பள்ளிகளின் பெயர் மற்றும் பள்ளி அமைந்துள்ள ஒன்றியம் குறித்த விவரங்களை பள்ளிக்கல்வி இயக்குநர், தேசிய தகவல் மையத்திற்கு அனுப்பி அடையாள எண் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(x) மேலும், 2018–2019–ஆம் ஆண்டில், ஓராண்டில் கொள்முதல் செய்யப்பட்ட மிதிவண்டிகள் எண்ணிக்கையை 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பிரித்து கொள்முதல் செய்யவிருப்பதால், ஒப்பந்தப்புள்ளியில் இடம் பெறும் தகுதி அளவு (Eligibility Criteria) மற்றும் இதர நிபந்தனைகளை அதற்கேற்ப மாற்றம் செய்திட கொள்முதல் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(xi) மேலும், மிதிவண்டிகளின் தரத்தை உறுதி செய்யும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டத்தில் உள்ள பொது மேலாளர், மாவட்ட தொழில் மைய அலுவலர் (District Industries Centre) தலைமையில் தொடர்புடைய மாவட்ட கல்வி அலுவலர் (District Educational Officer) மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையம் அல்லது பல்தொழில்நுட்ப கல்லூரி அல்லது பொறியியல் கல்லூரி ஆகிய 3 பிரதிநிதிகள் கொண்ட குழுவினை அமைத்து ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப விவரக் குறியீட்டின்படி (Technical Specification) மிதிவண்டிகளை குறைந்தபட்ச தர பரிசோதனை செய்து, தரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், மேற்கண்ட குழுவினைப் பொறுத்தமட்டில் மாவட்ட தொழில் மைய அலுவலர் தலைமையில் அந்தந்த பகுதிக்கேற்ப தேவையின் அடிப்படையில் கூடுதல் குழுக்களை அமைத்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.40393/Fin. JS(KP) BC,MBC and MW Dept/2019, நாள் 16.08.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை –5.
இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
சென்னை –5.
ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –5.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை –6.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை –5.
இயக்குநர், தொழில் மற்றும் வணிகத் துறை, சென்னை –5.
ஆணையர், வணிகவரித் துறை, சென்னை–5.
துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை,
பனகல் மாளிகை, சென்னை –15.
மாநிலக் கணக்காயர், சென்னை –6/9/18/35.
மாநிலக் கணக்காயர், சென்னை –6/18/35. (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு),சென்னை – 8.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / கொள்முதல் குழு உறுப்பினர்கள்
நகல் :
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9
அரசு செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
நிதி (பி, மி.பி)த் துறை,சென்னை –9.
பள்ளிக் கல்வித்துறை,சென்னை–9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை –9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/8/2019.
பிரிவு அலுவலர்.

16/8/19

## ABSTRACT

Special Programme Implementation Department – Scheme of Distribution of Laptop Computers at free of cost to the students studying in Government and Government Aided Schools and Polytechnic Colleges – Implementation of the scheme for the academic years 2020-2021 – Administrative Sanction – Orders – Issued.

---

## SPECIAL PROGRAMME IMPLEMENTATION DEPARTMENT

G.O.(Ms.)No.4

Dated: 02.07.2020
சார்வரி – ஆனி 18
திருவள்ளுவர் ஆண்டு 2051

**Read:**

1. G.O.(Ms.)No.1, Special Programme Implementation Department, dated : 03.06.2011.
2. G.O.(Ms.)No.8, Special Programme Implementation Department, dated : 09.05.2012.
3. G.O.(Ms.)No.9, Special Programme Implementation Department, dated : 23.05.2013.
4. G.O.(Ms.)No.17, Special Programme Implementation Department, dated : 12.09.2014.
5. G.O.(Ms.)No.11, Special Programme Implementation Department, dated : 02.09.2016.
6. G.O.(Ms.)No.1, Special Programme Implementation Department, dated 04.01.2018.
7. G.O.(Ms.)No.9, Special Programme Implementation Department, dated 04.07.2018.
8. G.O.(Ms.)No.3, Special Programme Implementation Department, dated 14.06.2019.
9. G.O.(Ms.)No.9, Special Programme Implementation Department, dated 01.11.2019.
10. G.O.(Ms.)No.54, School Education Department, dated 09.06.2020.

**Read also:**

11. From the Managing Director, ELCOT, Letter No. ELCOT / PID /ICB/ LTC /01/2020-21, dated:20.05.2020.
12. Note from the Principal Secretary to Government, School Education Department Dt.12.6.2020.

[P.T.O]

Scanned with CamScanner

13. From the Director of School Education, Chennai-6, letter No.6675/V2/E2/2020 dated:11.06.2020.

****

**ORDER**:

The Government in the order first read above, launched the scheme for distribution of laptop computers to the students studying in Government and Government Aided Schools and Colleges in the State at free of cost. The task of finalizing the specification and procurement of laptop computers is entrusted to Electronics Corporation of Tamil Nadu (ELCOT). The laptop computers shall be procured in a transparent manner through competitive bidding process following the procedures stipulated in the Tamil Nadu Transparency in Tenders Act 1998 and Rules 2000.

2. In the Government Orders second to ninth read above Administrative Sanction Orders and order of priority as well as criteria on distribution of laptop computers to students were issued in respect of this scheme for the years 2012-13 to 2019-20.

3. The Government decided to distribute Laptop Computers at Plus One level so that students would use the laptop computers during their Higher Secondary studies under the guidance of teachers and accordingly, orders were issued vide reference seventh cited. The year-wise / Institution-wise distribution of laptop computers to students is detailed below:

**Table - A**

| Year | Schools | Arts / Science Colleges | Engineering Colleges | Polytechnic Colleges |
|---|---|---|---|---|
| 2011-12 | Plus Two ($12^{th}$ Standard) | $1^{st}$ & $3^{rd}$ year | $2^{nd}$ & $4^{th}$ year | $1^{st}$ & $3^{rd}$ year |
| 2012-13 | Plus Two ($12^{th}$ Standard) | $3^{rd}$ year | $2^{nd}$ & $4^{th}$ year | $1^{st}$ & $3^{rd}$ year |
| 2013-14 to 2017-18 | Plus Two ($12^{th}$ Standard) | ---- | ---- | $1^{st}$ year |
| 2018-19 | Plus One & Plus Two ($11^{th}$ &$12^{th}$ Standard) | ---- | ---- | $1^{st}$ year |
| 2019-20 onwards | Plus One ($11^{th}$ Standard) | ---- | ---- | $1^{st}$ year |

Scanned with CamScanner

4. The Managing Director, ELCOT in his letter dated:20.05.2020 has informed that, as per the communication from the line departments, for the requirement student strengths for the Academic Year 2020-2021 and balance requirement for previous years are projected as follows (Table –B) :-

**Table – B**

| | | |
|---|---|---|
| | **I - Requirement for the Academic Year 2020-2021** | |
| I (i) | Plus One school students for the Academic Year 2020-2021 | 4,71,937 Nos. |
| I (ii) | First Year Polytechnic College students for the Academic Year 2020-2021 | 11,553 Nos. |
| I (iii) | Plus One Students for the Academic Year 2020-2021 of Directorate of Welfare of the Differently Abled | 463 Nos. |
| I | **Total Tentative Requirement for students of the Academic Year 2020-2021** | **4,83,953** Nos. |
| | | |
| **II - Balance requirement for previous years** | | |
| II (i) | Plus Two school students for the Academic Year 2017-18 | 1,82,511 Nos |
| | First Year Polytechnic College students for the Academic Year 2019-2020 | 11,553 Nos |
| | **Less** : Available laptop computers in the Institutions | -1,923 Nos. |
| II (ii) | Net requirement for First year Polytechnic College students for the Academic Year 2019-2020. | 9,630 Nos |
| II (iii) | Plus Two school students of the Academic Year 2018-19, 2019-2020 & Plus One school students of the Academic Year 2019-2020 of Directorate of Welfare of the Differently Abled | 1,293 Nos. |
| II | **Total Tentative Balance Requirement** | **1,93,434 Nos.** |
| | **Grand Total of I & II** | **6,77,387 Nos.** |

As in Table B, the overall total requirement of laptop computers is estimated by the Managing Director, ELCOT as 6,77,387 Nos.

5. The Managing Director, ELCOT has requested the Government to issue Administrative Sanction to proceed to float an International Competitive Bidding for the projected requirement of laptop computers and financial sanction for the procurement of Laptop Computers for the Academic year 2020-2021.

6. Due to the Government order issued to cancel the Board Examination for the 10th standard for the academic year 2019-2020 vide reference 10th cited, the Principal Secretary to Government, School Education Department has forwarded a revised tentative laptop computers Indent vide reference 12th cited, based on the request of the Director of School Education for procurement of 5,19,131 by increasing of 47,194 laptop Computers (10%) from 4,71,937 Nos (Table-B (i)) of laptop computers for the Plus One school students for the academic year 2020-2021 as in the reference 13th cited.

[P.T.O]

Scanned with CamScanner

7. The requirement of laptop computers for the year 2020-2021 is restricted and worked out tentatively as detailed below:

Table - C

| | | |
|---|---|---|
| i) | Plus One school students for the Academic Year 2020-2021 - **Para 6 above** | 5,19,131 Nos. |
| ii) | First Year Polytechnic College students for the Academic Year 2020-2021 – **Table B I (ii)** | 11,553 Nos. |
| iii) | Plus One school students for the Academic Year 2020-2021 of Directorate of Welfare of the Differently Abled -**Table B I (iii)** | 463 Nos. |
| iv) | Plus Two school students of the Academic Year 2018-19, 2019-2020 & Plus One school students of the Academic Year (2019-2020) Directorate of Welfare of the Differently Abled - **Table B II (iii)** | 1,293 Nos. |
| | **Total Tentative Requirement to be distributed in the Academic Year 2020-2021** | **5,32,440** Nos. |

8. The Government, after careful consideration, accord Administrative Sanction for the following:-

i) permit the Managing Director, ELCOT to procure 5,32,440 Nos. of laptop computers for implementation of the scheme for distribution of Laptop Computers to students for the year 2020-2021 as indicated in Para 7 above in a transparent manner through International Competitive Bidding process following the procedure stipulated in the Tamil Nadu Transparency in Tenders Act 1998 and Rules 2000.

ii) direct the Managing Director, ELCOT, that to procure only 5,32,440 Nos. of laptop computers as indicated in Para 7 and not to merge other department's requirement under this scheme and the procured laptop computers to be supplied as per indent given by line departments and shall not divert the laptop computers to any other department.

9. The additional requirement for the year 2017-18 passed out school students as per Government Order Ninth read above can be considered separately by Government after a specific proposal received from School Education Department with all the requisite details.

10. The sanction for release of funds will be issued separately based on the proposal received from ELCOT on the supply /completion of distribution of laptop computers.

Scanned with CamScanner

11. The Managing Director, ELCOT is directed to draw a supply schedule for the year 2020-2021 and send the same to the Government after the finalization of tender.

12. This order is issued with the concurrence of Finance Department vide its U.O.No.21530/JS(Per)/2020 dated:02.07.2020.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**HANS RAJ VERMA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT (FAC)**

To
The Managing Director, ELCOT, Chennai - 35.
The Additional Chief Secretary to Government, Finance Department, Chennai-9.
The Principal Secretary to Government, School Education Department, Chennai - 9.
The Principal Secretary to Government, Information Technology Department, Chennai-9.
The Secretary to Government, Higher Education Department, Chennai - 9.
The Director of Technical Education, Guindy, Chennai - 25.
The Director of School Education, College Road, Chennai - 6.
The Director of Welfare of the Differently Abled, Chennai-5.
The Principal Accountant General (A& E), Chennai - 18.
The Accountant General (Audit), Chennai - 18.
The Director of Treasuries and Accounts, Chennai-15
The Pay and Accounts Officer (South), Chennai - 35.
The Pay and Accounts Officer, Secretariat, Chennai - 9.
The Resident Audit Officer, O/o the Principal Accountant General (G&SSA), Chennai-9.

**Copy to:**
The Special Personal Assistant to Minister for Municipal Administration, Rural Development and Implementation of Special Programme, Chennai- 9.
The Vigilance Commission, Chennai-9.
The Directorate of Vigilance and Anti-Corruption, Chennai-16.
The Private Secretary to Additional Chief Secretary to Government, Special Programme Implementation Department, Chennai - 9.
Chief Minister's Office, Chennai – 9.
Finance (SW) Department, Chennai - 9.

Stock File/Spare Copy

**//FORWARDED BY ORDER//**

**SECTION OFFICER**

Scanned with CamScanner

சுருக்கம்

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை – அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக உரிய வாகன வசதி ஏற்படுத்தித் தருதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை

அரசணை (நிலை) எண்.152

நாள்.8.12.2014
ஜய கார்த்திகை 22,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கப்பட்டது:-

தொழிலாளர் ஆணையர் கடிதம் எண். W1/36149/14, நாள்:22.08.14

ஆணை:-

2014–2015ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரில் 12.08.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதர அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்:–

"தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் கல்வி வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது. பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் அவர்களின் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளது தான் இதற்குக் காரணம். எனவே, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக, உரிய வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக உரிய வாகன வசதி ஏற்படுத்தித் தருவது தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர் அரசு, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்களுக்கு அழைத்துவரவும், பின்னர் பெற்றோர்கள் பணியில் ஈடுபட்டுள்ள இடங்களில் அல்லது தங்குமிடங்களில் சேர்க்கவும் தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்திக் கொள்ள பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு

ஆணையிடுகிறது. இச்செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. இத்திட்டம் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்குநரால் செயல்படுத்தப்படும். இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல் படி (Sarva Shiksha Abhiyan - Framework for implementation – issued by Ministry of Human Resource Development) வாகன வசதிக்காக ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு (பத்து மாதங்கள்) ஆகும் செலவு ரூ.3,000/– ஆகும். அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் அவ்வப்போது வெளியிடப்படும் வரையறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

5. இச்செலவினம் தொடர்பான பட்டியல்களை செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அவர்களுக்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு மாநிலத் திட்ட இயக்குநர் அனைவருக்கும் கல்வி திட்ட இயக்கம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இத்திட்டத்தின் செயல்பாட்டு நிலை தொடர்பான மாதாந்திர அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி தொழிலாளர் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா.வீரசண்முக மணி,
அரசு செயலாளர்.

**பெறுநர்**

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்,
சென்னை–600 034.
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை–600 006.
மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி திட்ட இயக்கம், சென்னை–600 006.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை, சென்னை – 600 009.
பள்ளிக் கல்வித்துறை சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

கருக்கம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறந்த தரத்திலான கல்வியினை நன்மதிப்புள்ள தனியார் பள்ளிகள் மூலம் வழங்குதல் – அனுமதி அளித்தல்– ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.14

நாள் 31.01.2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.92, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.5.2007.
2. அரசாணை (நிலை) எண்.138, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 15.2.2008.
3. அரசாணை (நிலை) எண்.161, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ1) துறை, நாள் 12.11.2012.
4. தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006 அவர்களின் கடிதம் எண்.W1/ 7381/2014, நாள் 17.08.2015.
5. அரசாணை (நிலை) எண்.112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்18.10.2015.

-----

<u>ஆணை:-</u>

11.5.2012 அன்று இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது அப்போதைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் நலநிதியினை பயன்படுத்தி, அமைப்புசாராத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் தனியார் பங்களிப்புடன் கூடிய (PPP mode) உறைவிடப்பள்ளி உருவாக்கப்படும் என அறிவித்தார்.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் தங்கும் வசதியுடன் கூடிய பள்ளி துவங்குதல் குறித்து பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் விரிவான ஆய்வு மேற்கொள்ள தொழிலாளர் ஆணையரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. தற்போது தமிழகத்தில், தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டணமே வசூலிக்கப்படுவதால், பிற குழந்தைகளிடமிருந்து பெறப்படும் கட்டணத்திலிருந்து அமைப்புசாராத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி கொடுத்தல் இயலாததாகும்.

த.பி.பா

3. பார்வை ஒன்று, இரண்டு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணைகளில், அரசு / அரசு உதவி பெறும் / மாநகராட்சி/ நகராட்சி பள்ளிகளில் படித்து, அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் கல்வி வழங்க ஆணைகளும் வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியார் பங்களிப்புடன் உறைவிடப்பள்ளி தொடங்குவதற்கு பதிலாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்துவதைப் போன்று அரசுப் பள்ளியில் கல்வி பயின்று, அறிவுக் கூர்மையான அமைப்புசாரா தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அந்தந்த பகுதியில் சிறந்த தனியார் பள்ளிகளின் மூலம் தரமான கல்வி வழங்கலாம் எனத் தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. கவனமான பரிசீலனைக்குப்பின்னர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியினைப் பயன்படுத்தி, அரசு / அரசு உதவி பெறும்/ மாநகராட்சி/ நகராட்சி/ ஊராட்சி பள்ளிகளில், 5–ம் வகுப்பு வரை பயின்று, அறிவுக் கூர்மையான, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளிலிருந்து வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் 385 குழந்தைகள் தேர்வு செய்து, அவர்களுக்கு அந்தந்த பகுதிகளின் சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் 6–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை கல்வி வழங்கவும், அரசு/ அரசு உதவி பெறும் / மாநகராட்சி/ நகராட்சி பள்ளிகளில் 10–ம் வகுப்பு வரை பயின்று, அதிக மதிப்பெண் பெற்று, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளிலிருந்து, மாவட்டத்திற்கு பத்து குழந்தைகள் வீதம் (3 மாணவியர் உட்பட) தேர்ந்தெடுத்து, அந்தந்த பகுதிகளின் சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் 11 மற்றும் 12–ம் வகுப்பு கல்வி வழங்கவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், பள்ளிக் கட்டணம் தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும், விடுதிக்கட்டணம் ரூ.15,000/– மற்றும் பராமரிப்புக் கட்டணம் ரூ.5,000/– ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டொன்றுக்கு வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் அவ்வப்போது வெளியிடப்படும் நெறிமுறைகளை இத்துறையிலும் பரிசீலித்து பின்பற்ற தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இக்கருத்துருவினை உரிய தருணத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியக் கூட்டத்தில் வைத்து பின்னேற்பு பெறுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006. (இ)
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034. (இ)
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–600 102.(இ)

.த.பி.பா.

நகல்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.(இ)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை−600 009.(இ)

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை−600 009. (இ)

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
சென்னை − 600 009.(இ)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை−600 009.

நிதித் துறை, சென்னை−600 009.(இ)

பள்ளிக் கல்வித் துறை, சென்னை−600 009. (இ)

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. செயலாளரின் தனிச் செயலாளர்,
சென்னை−600 009. (இ)

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு−2) துறை, சென்னை−600 009. (2 நகல்)

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ1) துறை, நாள் 31.01.2017

## கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நற்பெயர்பெற்ற தனியார் பள்ளிகள் மூலம் உயர்கல்வி வழங்கும் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

| | | ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி அளித்தல் | பதினொன்று மற்றும் பன்னிரெண் வகுப்புகளுக்கு கல்வி அளித்தல் |
|---|---|---|---|
| 1. | பயனாளிகள் | அரசு பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி / நகராட்சி மற்றும் ஊராட்சி பள்ளிகளில் 5–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடையவர் ஆவார். | அரசு பள்ளிகள் / அரசு நித பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி நகராட்சி பள்ளி 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியங்களில் பதிவு தொழிலாளர்களின் குழந்தை இத்திட்டத்தின்கீழ் பயன் தகுதியுடையவர் ஆவார். |
| 2. | பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் முறை | அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் மாவட்ட கண்காணிப்பு குழு மூலமாக பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தொடக்கக் கல்வித்துறையின் உதவியுடன் தனித்தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெறும் மாணவ/ மாணவியரில் வட்டாரத்திற்கு (Block) ஒரு மாணவ/மாணவியர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதல் மாணவன்/மாணவி இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பாதநிலையில் அடுத்தடுத்த நிலையில் உள்ள மாணவ / மாணவியர் பரிசீலிக்கப்பட வேண்டும். | அமைப்புசாராத் தொழிலாளர்கள் வாரியங்களின் மாவட்ட கண்காணிப் மூலமாக பயனாளிகள் தேர்ந்தெடுக் வேண்டும். 10–ஆம் வகுப்பு பெ தேர்வில் அதிகபட்ச மதிப்பெண் மாணவ/மாணவியர்களில், மாவட்டத்திற்கு 10 மாணவர்கள் (3 மாணவியர் உட்பட) தேர்ந்தெடுக் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மாண மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயன் விரும்பாத நிலையில் அடுத்த நிலையில் உள்ள மாணவ / மாண பரிசீலிக்கப்பட வேண்டும். |
| 3. | தனியார் பள்ளியை தேர்ந்தெடுக்கும் முறை | i. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளின் பட்டியல் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் தயார் செய்யப்பட வேண்டும். மாநில வழி பாடத்திட்டம் வழியில் கல்வி அளிக்கும் பள்ளிகள் மட்டுமே தெரிவு செய்யப்படவேண்டும். | i. ஒவ்வொரு மாவட்டத்திலும் உ நற்பெயர் பெற்ற சிறந்த தனி பள்ளிகளின் பட்டியல் சம்மந்தப் மாவட்ட ஆட்சித் தலைவரால் த செய்யப்பட வேண்டும். மாநில பாடத்திட்டம் வழியில் கல்வி அளிக் பள்ளிகள் மட்டுமே தெ செய்யப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ii. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளை, மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ தேர்வு செய்யலாம்.<br><br>iii. விடுதியில் தங்கிப் பயில்வது கட்டாயமில்லை. மாணவ/மாணவியர் விரும்பினால் மட்டும் விடுதியில் தங்கிப் படிக்கலாம்.<br><br>iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவியர் அந்த மாவட்டம் தவிர்த்து இதர மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயில விருப்பம் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் மாணாக்கர்கள் விரும்பும் பள்ளிகளில் அவர்களை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br><br>v. எந்தவொரு தனியார் பள்ளியிலும், 6,7,8,9 மற்றும் 10 ஆகிய ஒவ்வொரு வகுப்பிலும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை ஒரு வகுப்பிற்கு மூவருக்கு மிகக்கூடாது. | ii. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியா பள்ளிகளை, மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ தேர் செய்யலாம்.<br><br>iii. விடுதியில் தங்கிப் பயில்வது கட்டாயமில்லை. மாணவ/மாணவிய விரும்பினால் மட்டும் விடுதியில் தங்கிப் படிக்கலாம்.<br><br>iv. ஒவ்வொரு மாவட்டத்திலு தேர்ந்தெடுக்கப்படும் மாணவ மாணவியர் அந்த மாவட்டம் தவிர்த்து இதர மாவட்டங்களில் உள்ள தனியா பள்ளிகளில் சேர்ந்து பயில விருப்ப தெரிவித்தால் சம்மந்தப்பட்ட மாவட் ஆட்சித்தலைவா மூல மாணாக்கர்கள் விரும்பும் பள்ளிகளி அவர்களை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br><br>v. எந்தவொரு தனியார் பள்ளியிலும், 1 மற்றும் 12 ஆகிய ஒவ்வொரு வகுப்பிலும் இத்திட்டத்தின் கீ சேர்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை ஒரு வகுப்பிற்கு மூவருக்கு மிகக்கூடாது. |
| 4. | மாணவர் சேர்க்கை முறை | மாணவர் தெரிவு செய்யும் பள்ளியில் அவரை சேர்ப்பதற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மாவட்ட தொடக்க கல்வி அலுவலருடன் இணைந்து மாணவர்/மாணவியரது சேர்க்கையினை உறுதிபடுத்த வேண்டும். | மாணவர் தெரிவு செய்யும் பள்ளியி அவரை சேர்ப்பதற்கு மாவட்ட தொழிலாளா அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்ட முதன்மைக் கல்வி அலுவலருட இணைந்து மாணவர்/மாணவியரது சேர்க்கையினை உறுதிபடுத்த வேண்டும். |
| 5. | அனுமதிக்கப் படும் வகுப்பு | இத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பில் மட்டுமே மாணாக்கர்கள் அனுமதிக்கப்படுவர். | இத்திட்டத்தின்கீழ் 11—ஆம் வகுப்பி மட்டுமே மாணாக்கர்க அனுமதிக்கப்படுவர். |

| | | | |
|---|---|---|---|
| 6. | மாற்றுப் பள்ளியில் கல்வி பயிலுதல் | இத்திட்டத்தின் கீழ் மாணாக்கர்கள் அவர்கள் விரும்பும் நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் நிலையில், ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணாக்கர்கள் எக்காரணம் கொண்டும் வேறு பள்ளியில் சேர்க்கப்படமாட்டார்கள். | இ... ன் கீழ் மாணாக்கர் அவர்கள் விரும்பும் நற்பெயர் பெ தனியார் பள்ளிகளில் சேர்க்கப நிலையில், ஒரு பள்ளியில் சேர்க்கப் மாணாக்கர்கள் எக்காரணம் கொண் வேறு பள்ளியில் சேர்க்கப்படமாட்டார்க |
| 7. | கட்டணம் | கல்விக்கட்டணம்:-<br>அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் குழு நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதங்களின்படி சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு கல்விக் கட்டணம் வழங்கப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரிடம் ஒரு நபர் குழு நிர்ணயித்த கல்விக் கட்டணம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது என்ற உறுதிமொழி பெற்று தொகையினை விடுவிக்க வேண்டும்.<br>விடுதிக் கட்டணம்:-<br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது.<br>பராமரிப்புக் கட்டணம்:-<br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது. | கல்விக்கட்டணம்:-<br>அரசால் நியமிக்கப்பட்டுள்ள நபர் குழு நிர்ணயம் செய்துள்ள கட் விகிதங்களின்படி சம்மந்தப் பள்ளிகளுக்கு கல்விக் கட்ட வழங்கப்பட வேண்டும். சம்மந்தப் பள்ளி தலைமையாசிரியரிடம் ஒரு குழு நிர்ணயித்த கல்விக் கட்ட மட்டுமே கேட்கப்பட்டுள்ளது எ உறுதிமொழி பெற்று தொகையி விடுவிக்க வேண்டும்.<br>விடுதிக் கட்டணம்:-<br>ஆண்டு ஒன்றுக்கு மாணாக்கருக்கு ரூ.15,000/-(ரூ பதினைந்தாயிரம் மட் அனுமதிக்கப்படுகிறது.<br>பராமரிப்புக் கட்டணம்:-<br>ஆண்டு ஒன்றுக்கு மாணாக்கருக்கு ரூ.5,000/-(ரூ ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகி |

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

31/01/17
பிரிவு அலுவலர்.

up to 20.02.2020

## தனியார் பள்ளியின் மாணவர்களின் சேர்க்கை விவரம்

அரசாணை (நிலை) எண்.14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.31.01.2017

| வருடம் – 2018 – 2019 | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) | 6–ம் வகுப்பு | 11–ம் வகுப்பு | மொத்த மாணவர்கள் | தொகை |
| 1 | தருமபுரி | 7 | 10 | 17 | 593319 |
| 2 | பெரம்பலூர் | 3 | 5 | 8 | 168840 |
| 3 | அரியலூர் | 4 | 6 | 10 | 341580 |
| 4 | தஞ்சாவூர் | - | 5 | 5 | 76861 |
| 5 | திருவாரூர் | - | 1 | 1 | 30300 |
| 6 | விருதுநகர் | - | 1 | 1 | 10400 |
| 7 | மதுரை | 1 | - | 1 | 10000 |
| | | 15 | 28 | 43 | 1231300 |

| | | வருடம் – 2019 – 2020 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி. | 6–ம் வகுப்பு | 7–ம் வகுப்பு | 11–ம் வகுப்பு | 12–ம் வகுப்பு | மொத்த மாணவர்கள் | தொகை |
| 1 | தருமபுரி | 8 | | 10 | | 18 | 1271997 |
| 2 | அரியலூர் | 4 | | 6 | | 10 | 395355 |
| 3 | மதுரை | - | | 2 | | 2 | 48470 |
| 4 | கரூர் | 1 | | 6 | | 7 | 131505 |
| 5 | கிருஷ்ணகிரி | 4 | | 1 | | 5 | 99770 |
| 6 | பெரம்பலூர் | | | 9 | | 9 | 489605 |
| 7 | விருதுநகர் | 5 | | 10 | | 15 | 80000 |
| | | 22 | | 44 | | 66 | 2516702 |

| வ.எண் | வருடம் | மொத்த மாணவர்கள் | தொகை |
|---|---|---|---|
| 1 | **2018 – 2019** | 43 | 12,31,300 |
| 2 | **2019 – 2020** | 66 | 25,16,702 |
| | **மொத்தம்** | 109 | 37,48,002 |